குத்து. எ-ம். கடலொடு காடொட்டாது; கடலிக் காடொட் டாது. எ-ம். வருவனவும் பிறவுமாம்.

இக்காலத்துச் சிதைந்து வழங்குமயக்கமுமுண்மையால், தொன்னெறி பிழையாதன ஆராய்ந்துணரப்படுமென்பார் தெரியுமோர்க்கென்றார். (கஅ)

கயஉ. உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
யொருசொன் னடைய பொருள்சென் மருங்கே.

இ - ள். பலவுருபுந் தம்முட்டொடர்ந்தடுக்கி வந்த வேற்றுமைச்சொற்களெல்லாம் முடிக்குஞ் சொல்லொன்ற னுன் முற்றுப்பெற்று நடக்கும், அவ்வொன்றனுற்பொருள் செல்லுமிடத்து. எ - று.

ஈண்டு வேற்றுமைக்கிளவியென்றது வேற்றுமையுருபை யிறுதியாகவுடைய சொல்லை.

உ-ம். 'என்னெடு நின்னெடுஞ் சூழாது.' எ-ம். 'அந்த னார் நூற்கு மறத்திற்கு மாதியாய்—நின்றது மன்னவன் கோல்.' எ-ம். வரும்.

சாத்தன் முயைக்காதலன்; நாய்தேவனுயிற்று என்புழி, தாயை, தேவனென்பன, காதலன் ஆயிற்றென்னும் பய னிலைக்கு அடையாய் இடைநின்றாற்போல, கோட்டைநுனிக் கட்குறைத்தான், தினையிற்கிளியைக் கடியும் என்புழி, நுனிக் கண், கிளியையென்பன, குறைத்தான், கடியுமென்னுமுடிக் குஞ் சொல்லிற்கு அடையாய் இடைநின்றவாகலான், அவை யடுக்கன்மையின், அவையுதாரணமாதல் உரையாசிரியர் கருத் தன்றென்க.

குழையைச் சாத்தனது கள்ளரின என இவ்வாறு தொட ராது வருவனவற்றை நீக்குதற்கு உருபுதொடர்ந்தடுக்கிய வென்றும், நீ தந்த சோற்றையுங் கூறையையு மூண்டுடுத் திருந்தேம் என இன்னோரன்னுழி ஒருசொல்லாற்பொருள் செல்லாமையின் அவற்றை நீக்குதற்குப் பொருள்சென் மருங்கென்றும், கூறினர். பிறவுமன்ன. (ககூ)

கலக. இறுதியு மிடையு மெல்லா வுருபு
நெறிபடு பொருள்வயி னிலவுதல் வரையார். *

இ - ள். வேற்றுமைத்தொட ரிறுதிக்கண்ணும் அத னிடைநிலத்தும் ஆறுருபுந் தத்தமக்கோதிய பொருட்கணிற் றலே வரையார். எ - று.

உ-ம். கடந்தானிலத்தை; வந்தான் சாத்தனெடு; கொடுத்தான் சாத்தற்கு; வலியன் சாத்தனின்; இருந்தான் குன்றத்துக்கண். எ-ம். நிலத்தைக்கடந்தான்; சாத்தனெடு வந்தான்; சாத்தற்குக் கொடுத்தான்; சாத்தனின் வலியன்; சாத்தனதாடை; குன்றத்துக்கணிருந்தான். எ-ம். வரும்.

நெறிபடுபொருள்வயி னிலவுதல்வரையாரெனவே, அப் பொருளுணர்த்தாக்கால் நிலவுதல் வரையப்படுமென்பதாம். அங்ஙனம் வரையப்படுவன யாவையெனின்:—ஆறுவதும் ஏழாவதும், சாத்தனதாடை, குன்றத்துக்கட்கூகை என விடைநின்று தம்பொருளுணர்த்தினாற்போல, ஆடை சாத்த னது, கூகை குன்றத்துக்கண் என விறுதிநின்றவழி அப் பொருளுணர்த்தாமையான், அவ்வுருபுகள் ஆண்டு வரையப் படும். ஆறனுருபேற்ற பெயர் உருபொடு கூடிப் பெயராயும் வினைக்குறிப்பாயும் நிற்றலுடைமையான், அந்நிலைமைக்கண் ஆடை சாத்தனது என இறுதிக்கண்ணு நிற்குமென்பது. இவ்வரையறை யுணர்த்துதற்கும், "மெய்யுருபு தொகாஅ விறுதி யான" என முன்னருணர்த்தப்படும் வரையறைக்கு இடம்படுத்தற்கும், "ஈறுபெயர்க்காகும்" என்றோதப்பட்ட உருபுதம்மையே இறுதியுமிடையும் நிற்குமென வகுத்துக் கூறினரென்பது. (உ0)

கலச. பிறிதுபிறி தேற்றலு முருபுதொக வருதலு
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப.

இ - ள். பிறிதோருருபு பிறிதோருருபையேற்றலும் ஆறுருபுந் தொக்கு நிற்றலும், நெறிபட வழங்கிய வழக்கைச் சார்ந்து வருதலான், வழுவாகா. எ - று.

* இச்சூத்திரத்திற்கும் மேல் வரும் "பிறிது பிறிதேற்றலும்" என்னுஞ் சூத்திரத்திற்குஞ் சேனவரையர் முதலாயினர் உரைத்த உரையை மறுத்துச் சிவஞானமுனிவர் வேறுரையுரைத்தார். தொல் காப்பியச்சூத்திரவிருத்தியிற் காண்க.

ஏற்புழிக்கோடலென்பதனால், பிறிதோருருபேற்பது ஆருவதேயாம். 2

பிறிதேற்றலுமென்றமையால், தானல்லாப் பிறவுரு பேற்றல் கொள்க. 3

உ-ம். சாத்தனதனை, சாத்தனதனொடு, சாத்தனதற்கு, சாத்தனதனின், சாத்தனதன்கண் என உருபு உருபேற்ற வாறும், நிலங்கடந்தான், தாய்மூவர், கருப்புவேலி, வரை வீழருவி, சாத்தன்கை, குன்றக்கூகை. எ-ம். கடந்தானிலம், இருந்தான்குன்றத்து. எ-ம். உருபு தொக்குநின்றவாறுங் கண்டுகொள்க. 4

இறுதியுமிடையுமென்பதனை அதிகாரத்தான் வருவித்து இரண்டிடத்துங் கூட்டியுரைக்க. 5

சாத்தனதனது எனச் சிறுபான்மை தன்னையுமேற்றல் உரையிற்கோடலென்பதனாற் கொள்க. 6

பெயரிறுதி நின்ற உருபு தன்பொருளொடு தொடராது பிறிதோருருபையேற்றலும், தாம் நின்று தம்பொருளுணர்த் தற்பாலன தொக்கு நிற்றலும், இலக்கணமன்மையின், வழு வமைத்தவாறு. (உக) 7

கயிரு. ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தோகாஅ விறுதி யான.

இ - ள். ஐகாரவேற்றுமைப்பொருளுங் கண்ணென் வேற்றுமைப்பொருளுமல்லாத பிறபொருண்மேனின்ற உருபு தொடர்மொழியிறுதிக்கட் டொக்கு நில்லா. எ - று. 1

இறுதியுமிடையுமென்பது அதிகரிக்க உருபுதொகவரு தலுமென்றமையான் வரைவின்றி எல்லாவுருபும் இறுதிக்கண் ணுந்தொகுமென்பது பட்டதனை விலக்கி, இவ்விருபொருட் கண்ணும் வருவனவே இறுதிக்கட்டொகுவன அல்லன தொகாவென வரையறுத்தவாறு. 2

அறங்கறக்கும் என இடைக்கட்டொக்கு நின்ற நான்கா வது கறக்குமறம் என இறுதிக்கட்டொக்கு நில்லாமை கண்டு கொள்க. பிறவுமன்ன. (உஉ) 3

கயசு. யாத னுருபிற் கூறிற் முயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்.

இ - ள். ஒருதொடர் யாதானுமோர் வேற்றுமையதுருபு கொடுத்துச் சொல்லப்பட்டதாயினும், அவ்வுருபு தன்பொருளான் அத்தொடர்ப்பொருள் செல்லாதவழிப் பொருள் செல்லும் பக்கத்து வேற்றுமையைச் சாரும். எ - று.

பொருள்செல்லாமையாவது உருபேற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லுந் தம்முளியையாமை. அவ்வேற்றுமையைச் சார்தலாவது அதன்பொருட்டாதல்.

'கிணையரி நாணற் கிழங்குமணற் கின்ற—முணையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்' என்றவழி நான்காவதன் பொருளான் அவ்வுருபேற்ற சொல்லும் அவ்வுருபு நோக்கிய சொல்லும் தம்முளியையாமையின், அவற்றையியைக்கும் ஏழாவதன்பொருட்டாயினவாறு கண்டு கொள்க.

உருபு தன்பொருளிற்றீர்ந்து பிறவுருபின்பொருட்டாயும் நிற்குமென உருபுமயக்கங் கூறியவாறுயிற்று.

அஃதேல், அரசர்கட்சார்ந்தான் என்புழியும் இரண்டாவதன்பொருட்கண் ஏழாவது சென்றதென்றமையான், அதனோடிதனிடை வேற்றுமையென்னையெனின்:—அரசர்கட்சார்ந்தான் என்புழி, அரசரது சார்தற்கிடமாதலே சாரப்படுதலுமாய் இருபொருண்மையும் ஒற்றுமைப்பட்டு நிற்றலின், தத்தம் பொருள்வயிற்றம்மொடு சிவணுமாகுபெயர்போல, இடப்பொருண்மைக்குரிய கண்ணினுருபு அவ்விடப்பொருண்மையோடு ஒற்றுமையுடைத்தாகிய செயப்படுபொருட்கும் ஆண்டுரித்தேயாம். மணற்கின்ற என்புழி, நான்காவதன் பொருளோடு ஏழாவதன்பொருட்கென்னு மியைபின்மையான், ஒப்பில்வழியாற் பிறிதுபொருள் சுட்டுமாகுபெயர் போல, அப்பொருட்குரித்தன்றி வந்ததெனப்படும். அன்ன பிறவற்றுள்ளும் இவ்வேறுபாடு தெரிந்துணர்க.

தன்பொருளிற்றீர்தல் இலக்கணமன்மையின், இதனை யிலக்கணத்தோடுறழ்ந்து வருவனவற்றோடு வைத்தார். (உங)

கஎஅ. எதிர்மறுத்து மொழியினுந் தத்த மரபிற்
பொருணிலை திரியா வேற்றுமைச் சொல்லே.

இ - ள். விதிமுகத்தாற்கூறுது எதிர்மறுத்துக் கூறினும், தத்தமிலக்கணத்தான் வரும் பொருணிலைமை திரியா வேற்றுமையுருபு. எ - று. 1

உ-ம். மரத்தைக் குறையான், வேலானெறியான் என வரும். 2

என்சொல்லியவாறுவெனின்:—குறையான், எறியான் என்றவழி வினைநிகழாமையின், மரமும் வேலுஞ் செயப்படு பொருளுங் கருவியுமெனப்படாவாயினும், எதிர்மறைவினையும் விதிவினையோடொக்குமென்பது நூன்முடிபாகலான், ஆண்டு வந்த உருபுஞ் செயப்படுபொருண் முதலாயினவற்று மேல்வந்தன வெனப்படுமென வழுவமைத்தவாறு. பிறவு மன்ன. (உச) 3

கஎஆ. கு ஐ ஆனென வரூஉ மிறுதி
அவ்வோடு சிவணுஞ் செய்யு ளுள்ளே.

இ - ள். கு ஐ ஆனென வரூஉ மூன்றுருபும், தொடரிறுதிக்கண்ணின்றவழி, அகரத்தோடு பொருந்தி நிற்றலு முடைய, செய்யுளுள். எ - று.

உ-ம். 'கடிநிலை யின்றே யாசிரி யற்க.' எ-ம். 'காவலோனக் களிறஞ் சும்மே.' 'களிறு மஞ்சுமக் காவலோன.' எ-ம். 'புரைதீர் கேள்விப் புலவ ரான.' எ-ம். 'உள்ளம் போலவுற்றுழி யுதவும்—புள்ளியற் கலிமா வுடைமை யான.' எ-ம். வரும்.

குகரமும் ஐகாரமும் ஈறு கெட அகரத்தோடு சிவணலுடைமையான், ஐ ஆன் கு என முறையிற்கூறுது, கு ஐ என அவற்றை இயைய வைத்தார். இயைய வைக்கின்றவர் ஐகாரம் முன் வைக்கவெனின்:—முறை அதுவாயினுஞ் செய்யுளின்பமோக்கிக் குகரம் முன் வைத்தாரென்பது.

அஃதேல், இத்திரிபு "தம்மீறு திரிதல்" என இடைச்சொற்கோதிய பொதுவிலக்கணத்தாற் பெறப்படுதலின் ஈண்

டுக்கூறல் வேண்டாவெனின்:—அப்பொதுவிலக்கணத்தான் எய்துவன உருபிற்கு மெய்துமேல், பிறிதுபிறிதேற்றலும் "பிறிதவணிலைய" லாயடங்குதலான், ஈண்டுக் கூறல் வேண்டாவாம்; அதனுன் அன்ன பொதுவிலக்கணம் உருபிற்கெய்தாதெனமறுக்க. (உடு)

கயக. அ எனப் பிறத்த லஃறிணை மருங்கிற்
குவ்வும் ஐயு மில்லென மொழிப.

இ - ள். அஃறிணைப்பெயர்க்கண் அகரத்தொடு சிவணி ஈறு திரிதல் குவ்வும் ஐயுமில்லென எய்தியது விலக்கியவாறு.

அ எனத் திரிதலே அ எனப் பிறத்தலென்றார். (உசு)

ககல. இதன திதுவிற் றென்னுங் கிளவியு
மதனைக் கொள்ளும் பொருள்வயி னுனு
மதனுற் செயற்படற் கொத்த கிளவியு [யும்
முறைக்கொண் டேழுந்த பெயர்ச்சோற் கிளவி
பால்வரை கிளவியும் பண்பி னுக்கமுங்
காலத்தி னறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியுந் தீர்ந்துமொழிக் கிளவியு
மன்ன பிறவு நான்க னுருபிற்
றொன்னெறி மரபின தோன்ற லாறே.

இ - ள். இதனதிது இத்தன்மைத்தென்னும் ஆறுவதன் பொருண்மையும், ஒன்றனையொன்று கொள்ளுமென்னும் இரண்டாவதன்பொருண்மையும், ஒன்றனுனென்று தொழிற் படற்கொக்குமென்னும் மூன்றுவதன் பொருண்மையும், முறைப்பொருண்மையைக்கொண்டு நின்ற பெயர்ச்சொல்லினது ஆறும்வேற்றுமைப் பொருண்மையும், நிலத்தை வரைந்து கூறும் பொருண்மையும் பண்பின்கணும் பொருவுமாகிய ஐந்தாவதன்பொருண்மையும், காலத்தின்கணறியப்படும் ஏழாம் வேற்றுமைப்பொருண்மையும், பற்றுவிடுபொருண்மையும் தீர்ந்துமொழிப்பொருண்மையுமாகிய ஐந்தாவதன்பொருண்மையும், அவைபோல்வன பிறவும், நான்க னுருபாற்றோன்றுதற்கட் டொன்னெறிமரபின. எ - று.

உ-ம். யானைக்குக் கோடு கூரிது. எ-ம். இவட்குக் கொள்ளுமிவ்வணி. எ-ம். அவற்குச் செய்யத்தகுமக்காரியம். எ-ம். ஆவிற்குக்கன்று. எ-ம். கருவூர்க்குக் கிழக்கு. எ-ம். சாத்தற்கு நெடியன். எ-ம். காலைக்கு வரும். எ-ம். மனை வாழ்க்கைக்குப் பற்றுவிட்டான். எ-ம். ஊர்க்குத் தீர்ந்தான். எ-ம். அப்பொரு ளெல்லாவற்றின்கண்ணும் நான்காமுருபு வந்தவாறு கண்டுகொள்க.

வன்பால் மென்பால் என்பவாகலின், நிலத்தைப் பாலென்றார்.

"சிறப்பே நலனே காதல் வலியோ—டங்நாற் பண்பு நிலைக்கள மென்ப" எனவுவமை நிலைக்களத்தைப் பண்பென்ப வாகலின், பண்பினுக்கமென்றார்.

இதுவும் வேற்றுமைமயக்கமாகலின் மேற்கூறப்பட்ட வற்றோடு வையாது இத்துணையும் போதந்து வைத்ததென் னையெனின்:—அது தொகை விரிப்ப மயங்குமதிகாரம்; இது தொகையல்வழி யானையது கோடு கூரிது என்னுந்தொடர் மொழிப்பொருள் சிதையாமல் யானைக்குக் கோடு கூரிது என நான்காவது ஆண்டுச் சென்று நின்றதாகலான், அவற்றோடு வையாராயினுரென்பது.

அஃதேல், ஆவின்கன்று எனவுங் கருவூர்க்கிழக்கு என வுந் தொகையாயும் வருதலின், அப்பொருட்கண் நான்காவது வருதல் ஈண்டுக் கூறற்பாற்றன்றெனின்:—அஃதொக்குமன் னுயினும், பிறவேற்றுமைப் பொருட்கண் நான்காவது சேற லொப்புமையான் அவற்றிற்கு வேறோர் சூத்திரஞ்செய்யாது இவற்றோடொருங்கோதினுரென்பது.

அன்னபிறவுமென்றதனுன், ஊர்க்கட்சென்றான், ஊர்க்க ணுற்றது செய்வான் என்னுமேழாவதன்பொருட்கண்ணும், ஊரிற்சேயன் என்னும் ஐந்தாவதன் பொருட்கண்ணும், ஊர்க்குச்சென்றான், ஊர்க்குற்றது செய்வான், ஊர்க்குச் சேயன் என நான்காவது வருதல் கொள்க. பிறவுமன்ன. ()

கக க. ஏனை யுருபு மன்ன மரபின
மான மிலவே சொன்முறை யான.

இ - ள். நான்கனுருபல்லாத பிறவுருபுந் தொகையல்லாத தொடர்மொழிக்கண் ஒன்றன்பொருள் சிதையாமை ஒன்று மயங்குதற்கட் குற்றமில, வழங்குமுறைமையான். எ - று.

உ-ம். நூலது குற்றங்கூறினென் என்னுந் தொடர்மொழிக்கண் நூலைக் குற்றங்கூறினென். எ-ம். அவட்குக் குற்றேவல் செய்யும் என்னுந் தொடர்மொழிக்கண் அவளது குற்றேவல் செய்யும். எ-ம். வருவன கொள்க. பிறவுமன்ன. (உஅ)

ககஉ. வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலங் கருவி யென்ரு
வின்னதற் கிதுபய னாக வென்னு
மன்ன மரபி னிரண்டொடுந் தோகைஇ
யாயெட் டென்ப தொழின்முத னிலையே.

இ - ள். வினையும், வினைமுதலும், செயப்படுபொருளும், நிலமும், காலமும், கருவியுமாகிய ஆறும், இன்னதற்கு, இது பயனாக என்று சொல்லப்படும் இரண்டொடுந்தொக்குத் தொழிலது முதனிலையெட்டாமென்று சொல்லுவர் ஆசிரியர். எ - று.

ஈண்டேதுப்பொருண்மை கருவிக்கணடக்கப்பட்டது.

தொழின்முதனிலையென்றது தொழிலது காரணத்தை. காரியத்தின் மூன்னிற்றலின் முதனிலையாயிற்று. காரணமெனினும் காரகமெனினுமொக்கும்.

வினைந்தான் என்றவழி, வினைதற்றொழிலும், வினைந்தகருத்தாவும், வினையப்பட்ட குடமும், வினைதற்கிடமாகிய நிலமும், அத்தொழினிகழ்ங்காலமும், அதற்குக் கருவியாகிய திகிரிமுதலாயினவும், வினையப்பட்ட குடத்தைக் கொள்வானும், வினைந்ததனையபயனுமாகிய எட்டும்பற்றி அத்தொழினிகழ்ந்தவாறு கண்டுகொள்க.

அஃதேல், தொழிலின் வேறுயது காரகமாகலின், வினைதற்றொழிற்கு அத்தொழிறான் காரகமாமாறென்னையெனின்:- வினைந்தானென்பது வினைதலைச் செய்தானென்னும் பொருட்டாகலின், செய்தற்கு வினைதல் செயப்படுபொருணீர்மைத்

தாய்க் காரகமாமென்பது. அற்றாகலினன்றே, கொளலோ கொண்டானென்பது இரண்டாம் வேற்றுமைத்தொடராயிற் றென்பது.

இன்னதற்கு, இதுபயனாக என்னும் இரண்டும் அருகி யல்லது வாராமையின், அன்னமரபினிரண்டொடு மெனப் பிரித்துக் கூறினர். 6

அஃதேல், செய்வது முதலாகிய முதனிலை வேற்றுமை யோத்தினுட் கூறப்பட்டமையின் இச்சூத்திரம் வேண்டா வெனின்:—அற்றன்று: இரண்டாவதற்கோதிய பொருளெல் லாவற்றையுஞ் செயப்படுபொருளெனத் தொகுத்து, ஏது வைக் கருவிக்கண்ணும் வினைசெய்யிடத்தைக் காலத்தின் கண்ணும் அடக்கி, ஏழாகச் செய்து, அவற்றொடு ஆண்டுப் பெறப்படாத வினையென்னுமுதனிலை கூட்டி, எட்டென்று ராகலின், இப்பாகுபாடு ஆண்டுப் பெறப்படாமையான், இச் சூத்திரம் வேண்டுமென்பது. 7

இதனுற்பயன் "நிலனும் பொருளுங் காலமுங் கருவி யும்" எனவும் "செயப்படு பொருளைச் செய்தது போல" எனவும் வினைக்கிலக்கணங் கூறுதலும் பிறவுமாம். (உக) 8

ககஙூ. அவைதாம்,
வழங்கியன் மருங்கிற் குன்றுவ குன்றும்.

இ - ள். மேற்கூறப்பட்ட தொழின்முதனிலைதாம் எல் லாத் தொழிற்கும் எட்டும் வருமென்னும் யாப்புறவில்லை; வழக்கின்கட் சிலதொழிற்கட் குன்றத்தகுவன குன்றி வரும். எ - று. 1

குன்றத்தகுவனவாவன செயப்படுபொருளும் ஏற்பதும் பயனுமாம். 2

கொடியாடிற்று, வளிவழங்கிற்று, என்புழி, செயப்படு பொருளும் ஏற்பதும் பயனுமாகிய முதனிலையில்லையாயினும், ஒழிந்தனவற்றுள் ஆதிதலும் வழங்கலுமாகிய தொழினிகழ்ந் தவாறு கண்டுகொள்க. 3

இதனுற்பயன், எல்லாத்தொழிற்கும் முதனிலையெட்டுங் குன்றுது வருமோ சிலதொழிற்குச் சில குன்றிவருமோ 4

வென்னும் ஐயரீங்குதலும், செயப்படுபொருள் குன்றிய வினையையுணர்த்துஞ்சொல் இரண்டாவதனேடியையாதென் பது பெறுதலுமாம். (கo)

ககச. முதலிற் கூறுஞ் சினையறி கிளவியுஞ்
சினையிற் கூறு முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரு
மியன்றது மொழிதலு மிருபெய ரொட்டும்
வினைமுத லுரைக்குங் கிளவியோடு தோகைஇ
யனையமர பினவே யாகுபெயர்க் கிளவி.

இ - ள். முதற்சொல்வாய்பாட்டாற் கூறப்படுஞ் சினை யறிகிளவியும், சினைச்சொல்வாய்பாட்டாற் கூறப்படு முதலறி கிளவியும், நிலத்துப் பிறந்த பொருண்மேல் அந்நிலப்பெயர் கூறலும், பண்புப்பெயர் அப்பண்புடையதனை யுணர்த்திப் பண்பு கொள் பெயராய் நின்றதூஉம், முதற்காரணப்பெய ரான் அக்காரணத்தானியன்ற காரியத்தைச் சொல்லுதலும், அன்மொழிப்பொருண்மேனின்ற இருபெயரொட்டும், செயப் பட்டபொருண்மேல் அதனைச் செய்தான் பெயரைச் சொல் லுஞ்சொல்லுமென அப்பெற்றிப்பட்ட இலக்கணத்தையுடை யன ஆகுபெயர். எ - று.

உ-ம். கடித்தின்றான், தெங்கு தின்றான் என முதற் பெயர் சினைமேலும், இலை நட்டு வாழும், பூ நட்டு வாழும் எனச் சினைப்பெயர் முதன்மேலும், குழிப்பாடி நேரிது என நிலப்பெயர் அந்நிலத்துப் பிறந்த ஆடைமேலும், இம்மணி நீலம் எனப் பண்புப்பெயர் அப்பண்புடையதன்மேலும், இக் குடம் பொன் எனக் காரணப்பெயர் அதனுனியன்ற காரியத் தின் மேலும், பொற்றொடி வந்தாள் என விருபெயரொட்டு அன்மொழிப் பொருண் மேலும், இவ்வாடை கோலிகன் எனச் செய்தான்பெயர் செயப்பட்டதன்மேலும், வந்தவாறு கண்டுகொள்க.

அன்மொழித்தொகை எச்சவியலுள் உணர்த்தப்படுத லின் ஈண்டுக் கூறல்வேண்டா வெனின்:—அன்மொழித் தொகை தொகையாதலுடைமையான் ஆண்டுக் கூறினார்; இயற்கைப் பெயர் ஆகுபெய்ரெனப் பெயர் இரண்டாயடங்

கும்வழி ஒரு பெயர்ப்பட்டதென மேலும் வந்தவாறு கண்டு கொள்க. அன்மொழித்தொகை எச்சவியலுளுணர்த்தப் படும்; அதனால் அவ்வாகு பெயராதலுடைமை பற்றி ஈண்டுக் கூறினார்; எச்சவியலுட் கூறப்பட்டவாயினும் வினையெச்ச முதலாயின வினைச்சொல்லாதலும் இடைச்சொல்லாதலுமு டைமையான் அவற்றை வினையியலுள்ளும் இடையியலுள் ளுங் கூறியவாறுபோலவென்பது. *

தொல்காப்பியனுனுங் கபிலனுனுஞ் செய்யப்பட்ட நூலைத் தொல்காப்பியங் கபிலமென்றல் வினைமுதலுரைக்குங் கிளவியென்றூரால் உரையாசிரியரெனின்:—அற்றன்று: ஒரு மொழி யிலக்கணம் ஈண்டுக் கூறுராயினும், வெற்புச் சேர்ப்பு என்னும் பெயரிறுதி இதனையுடையானென்னும் பொரு டோன்ற அன்னென்பதோரிடைச்சொல் வந்து வெற்பன் சேர்ப்பன் என நின்றூற்போல, தொல்காப்பியன் கபிலன் என்னும் பெயரிறுதி இவ்வுறச்செய்யப்பட்டதென்னும் பொரு டோன்ற அம்மென்ப தோரிடைச்சொல் வந்து அன் கெடத் தொல்காப்பியம் கபிலம் என நின்றனவென்பது ஆசிரியர் கருத்தாம்; அதனுன் அவையுதாரணமாதல் உரையாசிரியர் கருத்தன்றென்க.

அனையமரபினவென்றது அவ்வாறியாதானுமோரியைபு பற்றி ஒன்றன்பெயர் ஒன்றற்காதலென ஆகுபெயரிலக்கணத் திற்குத் தோற்றுவாய் செய்தவாறு. ஒன்றன்பொருட்கண் ஒன்று சேறலென்னு மொப்புமையான் இவற்றையீண்டுக் கூறினார். அஃதேல், ஆகுபெயர் எழுவாய்வேற்றுமைமயக்க மாதலான் ஈண்டுக் கூறினுரென்றூரால் உரையாசிரியரெ னின்:—ஆகுபெயர் ஏனைவேற்றுமையுமேற்று நிற்றலானும், எழுவாய்வேற்றுமையாய் நின்றவழியும் அது பிறிதோர் வேற்றுமைப்பொருட்கட் சென்று மயங்காமையின் வேற்று மைமயக்க மெனப்படாமையானும், அது போலியுரையென்க.

ககடு. அவைதாம்,

தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவணலு

* ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் ஒன்றென்றல் பொருந்தாமை தொல்காப்பியச் சூத்திரவிருத்தியிற் காண்க.

மோப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலு
மப்பண் பினவே நுவலுங் காலை
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

இ - ள். மேற்கூறப்பட்ட ஆகுபெயர்தாந் தத்தம்பொருளினீங்காது தம்பொருளின் வேறல்லாத பொருளொடு புணர்தலும், தம்பொருட்கியைபில்லாத பிறிதுபொருளைச் சுட்டிநிற்றலுமென இரண்டியல்புடைய வேறுபாடு போற்றியுணரப்படும். எ - று.

கடுவென்னுமுதற்பெயர் முதலோடொற்றுமையுடைய சினைமேனிற்றல் தத்தம்பொருள்வயிற்றம்மொடு சிவணலாம். குழிப்பாடி யென்னுமிடப்பெயர் இடத்தின் வேறுய ஆடை மேனிற்றல் ஒப்பில்வழியாற் பிறிதுபொருள் சுட்டலாம். அஃதேல், குழிப்பாடியும் ஆடையும் இடமும் இடத்துநிகழ் பொருளுமாகிய இயைபுடையவாகலினன்றே அதன்பெயர் அதற்காயிற்று; அதனுன் அஃதொப்பில்வழியாற் பிறிது பொருள் சுட்டலாமாறென்னையெனின்:—நன்று சொன்னுய்: அவ்வியைபுடையவேனும், முதலுஞ் சினையும் பண்பும் பண்புடையதுமாதன்முதலாகிய ஒற்றுமையாகிய இயைபிலவாகலின் அவை தம்முள் வேறெனவேபடும்; அதனுற் குழிப்பாடியென்பது ஒப்பில்வழியாற்பிறிதுபொருள் சுட்டலேயாமென்பது. ஒற்றுமையாகிய இயைபுள்வழி அது தத்தம்பொருள்வயிற்றம்மொடு சிவணிற்றென்றும், அவ்வியைபின்றி இடமும் இடத்துநிகழ்பொருளுமாதன் முதலாகிய இயைபேயாயவழி இஃதொப்பில்வழியாற் பிறிதுபொருள் சுட்டிற்றென்றும், வேறுபடுத்துணரப்படுமென்பார், வேற்றுமைமருங்கிற்போற்றல்வேண்டுமென்றுரென்பது. அஃதேல், இதனைப் பிரித்து ஒருசூத்திரமாக உரைத்தாரால் உரையாசிரியரெனின்:—அங்ஙனம் பிரிப்பின், தம்மொடு சிவணலும் பிறிதுபொருள் சுட்டலுமாகிய இவற்றது வேறுபாட்டின்கணென்பது இனிது பெறப்படாமையானும், எழுத்தோத்தினுள் "புள்ளி யிறுதியு முயிரிறு கிளவியும்" என்னுஞ் சூத்திரத்து இந்நிகர்ப்பாதுகாவலைப் பிரியாது ஒன்றுகவேயுரைத்தலானும், அவர்க்கது கருத்தன்றென்க. (நஉ)